# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2034/38 - 2017 සැප්තැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2017.09.01

*2034/38 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4/81* (XII)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*23 ய ஆம் பிரிவின் கீழான கட்டளை*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 51 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 23 ய என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளை தடைசெய்கின்றேன்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2017, ஓகத்து 30.

**அட்டவணை**

செயற்பாடுகள் :

(i) நாட்டின் பயன்பாட்டுக்கென, விரிவடையக்கூடிய பொலியெஸ்டரினிலிருந்து உணவுக் கொள்கலன்கள், தட்டுக்கள், கோப்பைகள் மற்றும் கரண்டிகளை உற்பத்தி செய்தல் ; அத்துடன்

(ii) நாட்டினுள், விரிவடையக்கூடிய பொலியெஸ்டரினிலிருந்து ஆக்கப்பட்ட உணவுக் கொள்கலன்களை, தட்டுக்களை, கோப்பைகளை மற்றும் கரண்டிகளை விற்பனை செய்தல், விற்பனைக்காக முன்வைத்தல், இலவசமாக வழங்குதல், காட்சிப்படுத்துதல் அல்லது பயன்படுத்துதல்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக -

"உணவுக் கொள்கலன்கள்" என்பது, சாப்பாட்டுப் பெட்டிகள் (Lunch Boxes) எனப் பொருள்படும்.

*9-366*


1A - PG 3681 — 5007 (2017/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.